




நூலக மாநாட்டை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தொடங்கி வைத்து பேசியபோது எடுத்த படம்.

# வீடுகள்தோறும் நூலகத்தை உருவாக்க வேண்டும்

## அப்துல்கலாம் வேண்டுகோள்

புதுச்சேரி, டிச.10–

வீடுகள்தோறும் நூலகத்தை உருவாக்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வேண்டுகோள் விடுத்தார்.

### தேசிய மாநாடு

புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனமும், டெல்லியில் உள்ள டெல்நெட் நிறுவனமும் இணைந்து 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' என்ற தலைப்பில் தேசிய மாநாட்டை புதுச்சேரியில் 3 நாட்கள் நடத்துகின்றன. இதன் தொடக்க விழா நேற்று ஆனந்தா இன் ஓட்டலில் நடந்தது.

விழாவில் பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் தலைமை நூலகர் அனுரூப் நாயக் வரவேற்று பேசினார். டெல்நெட் நிறுவன இயக்குனர் கவுல் அறிமுக உரையாற்றினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி மாநாட்டை தொடங்கி வைத்து விழாமலரை வெளியிட்டார். அப்போது அவருக்கு வரவேற்பு அளித்து பூங்கொத்து வழங்கப்பட்டது.

அதைப்பெற்றுக்கொண்ட அப்துல்கலாம் விழா மேடை முன் வரிசையில் அமர்ந்திருந்த பாலம் கல்யாணசுந்தரம் என்ற மூத்த நூலகரை அழைத்து அவரிடம் அந்த பூங்கொத்தை கொடுத்தார்.

### அப்துல்கலாம்

விழாவில் அப்துல்கலாம் பேசியதாவது:–

நான் மாணவனாக இருந்தபோது சென்னை மூர் மார்க்கெட் பகுதியில் புத்தகங்கள் கிடைக்கும். பெரும்பாலான நேரங்களில் அங்கு சென்று புத்தகங்களை வாங்குவேன். அந்த புத்தகங்கள் எனது எண்ணம், வாழ்க்கை முறையை மாற்றின. காசு கொடுத்து வாங்கிய புத்தகங்களை அதிகம் படிப்பவன் நான்.

நமது இந்திய நாட்டில் சுமார் 80 கோடி இளைஞர்கள் உள்ளனர். அவர்கள் புத்தகம் படிக்கும் வழக்கத்தினை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நல்ல புத்தகங்கள் அறிவில் சிறந்தவர்களை உருவாக்கும். தற்போது சமூக வலைதளங்களிலும் நல்ல தகவல்கள் கிடைக்கின்றன.

### வீடுகளில் நூலகம்

இந்தியாவில் 70 கோடி பேர் செல்போன்கள் வைத்திருக்கின்றனர். இந்த செல்போன்கள் மூலம் நூலகம் தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள செல்போன் நூலகம் என்ற திட்டத்தை தொடங்கி அனைத்து புத்தகங்கள் பற்றிய விவரங்கள் கிடைக்க செய்யவேண்டும்.

கார் டிரைவராக இருந்த ஒருவர் புத்தகம் படிக்கும் பழக்கம் உடையவர். அவர் படிப்படியாக பி.எச்டி. வரை படித்து அரசு கல்லூரியில் உதவி பேராசிரியராக உயர்ந்துள்ளார்.

ஒவ்வொருவரும் தங்களது வீட்டில் சிறிய அளவிலான நூலகத்தை உருவாக்கவேண்டும். தங்கள் குழந்தைகளிடம் புத்தகம் படிக்கும் வழக்கத்தையும் ஏற்படுத்தி தரவேண்டும். இதனால் டி.வி. பார்க்கும் நேரமும் குறையும். பொதுஅறிவு குறித்து நாள்தோறும் தங்கள் குழந்தைகளிடம் விவாதிக்க வேண்டும்.

இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.

விழாவில் பிரெஞ்சு இன்ஸ்டிடியூட் இயக்குனர் பியர் கிராட்டு, டெல்நெட் மேலாளர் சங்கீதா கவுல் உள்பட உள்நாடு, வெளிநாடுகளை சேர்ந்த சுமார் 350 நூலகர்கள் கலந்துகொண்டனர். இந்த மாநாடு நாளை (வியாழக்கிழமை) வரை நடக்கிறது.

DINATHANTHI
(10/12/14)